## *DEPOSITION OF WITNESS*

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.577/2023

## PW: 7

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.கோவிந்தசாமி | Occupation: | கூலி வேலை |
| Father's Name : | திரு.ஆறுமுகம் | Religion : | இந்து |
| Village : | தேனாம்படுகை | Age : | 65 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 08th day of January 2025.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் தேனாம்படுகையில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கபடும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். எங்கள் வீட்டிற்கு அருகே போலீசார் வந்து வரைபடம் வரைந்து தாங்கள் வந்ததற்கு கையொப்பம் செய்யுமாறு கேட்டு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். என்னுடன் மணிகண்டன் என்பவரும் கையொப்பம் செய்து கொடுத்தார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. தேதி ஞாபகம் இல்லை ஆனால் 4 வருடங்களுக்கு

முன்பாக மாலையில் வந்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் காலனி தெருவில் உள்ளேன்.

(சாட்சி தனது குவிமுச 161 வாக்குமூலத்திலிருந்து பிறழ்ந்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரினார். குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு என்னென்ன உள்ளது என்று எழுதி வரைபடம் வரைந்து பார்வை மகஜரில் என்னிடமும் மணிகண்டனிடமும் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள் என்றாலும் தற்போது எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதால் போலீசார் வந்து சென்றதற்காக கையொப்பம் பெற்றதாகவும், அவர்கள் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தது எனக்கு தெரியாது என்றும் போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA

Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2025.01.09 10:05:55 +0530

*Chief Judicial Magistrate,*
Thanjavur at Kumbakonam.